**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள பிரதி/ உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கு அனுவதித்தல் (secondment) அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்**

01. இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பிரதி/ உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காக அரசாங்கத்தின் தேவையின்படி அனுவதித்தல் (secondment) அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகுதியான அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. சுயவிபரம் (CV), அரசாங்க சேவையில் சேவை உறுதிப்படுத்தல் கடிதம், உரிய தொழில்சார் தகைமை ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் நிறுவனத் தலைவரின் பரிந்துரை ஆகியவற்றுடன் சேர்த்து தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அரசாங்க சேவையில் நிறைவேற்றுத் தரத்தில் தற்போது சேவையாற்றிவரும் ஆர்வமுள்ள அலுவலர்களிடம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் 2025.03.10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கப்பெற வேண்டும்.

03. தகவல்களை அனுப்பும் போது குறிப்பாக பின்வரும் விபரங்களைத் தயவுகூர்ந்து கவனத்திற்கொள்க.

i. பெயர், தே.அ.அ. இலக்கம், செயற்பாட்டிலுள்ள தொலைபேசி இலக்கம் ஆகியவை சுயவிபரத்தில் (CV) தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

ii. இந்தப் பதவிகளுக்கு, நாடளாவிய சேவையின் தரம் II/III இல் எஸ்எல் 1 – 2016 வகுதியின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

iii. தகுதியுள்ள அலுவலர் வகுதிகள்,

| **வெற்றிடமாகவுள்ள பதவி** | **அடிப்படை கல்வித் தகைமை (பின்வரும் துறைகளில் ஒன்றில் பட்டம்)** | **தகுதியுள்ள அலுவலர்கள்** |
|---|---|---|
| உதவிப் பணிப்பாளர் (வலையமைப்பு) | தொலைத்தொடர்பு அல்லது இலத்திரனியல் அல்லது மின் பொறியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் | இலங்கைப் பொறியியல் சேவையின் தரம் II / III அலுவலர்கள் |
| உதவிப் பணிப்பாளர் (உட்கட்டமைப்புப் பராமரிப்பும் அபிவிருத்தியும்) | குடிசார் (சிவில்) பொறியியல் | |
| உதவிப் பணிப்பாளர் (கருத்திட்ட முகாமைத்துவம்) | மின் பொறியியல் | |
| உதவிப் பணிப்பாளர் (நிதி) | நிதி அல்லது கணக்கியல் அல்லது வர்த்தகம் | இலங்கை கணக்காளர் சேவையின் தரம் II / III அலுவலர்கள் |
| உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | அரசாங்க நிர்வாகம் அல்லது அரசாங்கக் கொள்கை அல்லது மனித வள | இலங்கை நிர்வாக சேவையின் தரம் II / III அலுவலர்கள் |

| | | |
|---|---|---|
| | அபிவிருத்தி அல்லது வியாபார நிர்வாகம் | |
| உதவிப் பணிப்பாளர் (திட்டமிடலும் கூட்டாண்மை அலுவல்களும்) | அரசாங்க நிர்வாகம் அல்லது அரசாங்கக் கொள்கை அல்லது திட்டமிடல் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது புள்ளிவிபரவியல் அல்லது பொருளியல் அல்லது தொலைத்தொடர்பு அல்லது விஞ்ஞானம் | இலங்கை நிர்வாக சேவையின்/திட்டமிடல் தரம் II / III அலுவலர்கள் |
| பிரதி/ உதவிப் பணிப்பாளர் (போட்டி) | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் அல்லது தொலைத்தொடர்பு அல்லது நிதி அல்லது வர்த்தகம் அல்லது பொருளியல் அல்லது வியாபார நிர்வாகம் அல்லது புள்ளிவிபரவியல் | நாடளாவிய சேவையின் தரம் II / III அலுவலர்கள் |

iv. PDF வடிவ மாதிரியில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் careers@trc.gov.lk இற்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை உங்களின் மின்னஞ்சலின் விடயக் கோட்டில் குறிப்பிடுவதை தயவுசெய்து உறுதிப்படுத்துக.

v. 0112-2689345 எனும் தொலைபேசி இலக்கத்திற்கூடாக மேலதிக தகவல்களைக் கோர முடியும்.

பணிப்பாளர் நாயகம்,

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,